## கொண்டைக்கடலை நல்ல விலை பெறும்

கொண்டைக்கடலை, பல சத்துக்கள் நிறைந்த முக்கியமான தானிய பயிறு வகைகளில் ஒன்றாகும். இதில் 25 சதவிகிதம் புரதச்சத்தும், 60 சதவிகிதம் கார்போஹைட்ரேட்டும் உள்ளதால் இவை சுகாதார உணவு என பாராட்டப்படுகிறது. கொண்டைக்கடலை வளரும் நாடுகளில் உள்ள சைவ உணவு உண்ணும் ஏழை மக்களுக்கு தானியம் சார்ந்த புரத உணவாக உள்ளது. கொண்டைக்கடலையாக மட்டுமல்லாமல், மாவாகவும் பயன்படுத்தப்படுகிறது.

உலகில், கொண்டைக்கடலை மூன்றாவது முக்கிய பயிறு வகையாக உள்ளது. அதிக உற்பத்தியாளரான இந்தியா, அதன் மொத்த பரப்பளவில் 63 சதவிகிதம் கொண்டைக்கடலை உற்பத்தியில் பங்களிக்கிறது. இந்தியாவில், 2015-16 ஆம் ஆண்டு கொண்டைக்கடலை 81.17 லட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 59.01 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, இராஜஸ்தான், உத்திர பிரதேசம், ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகியவை கொண்டைக்கடலை உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். இம்மாநிலங்களில் தேசி மற்றும் காபூலி என்ற இரண்டு வெவ்வேறு வகையான கொண்டைக்கடலை அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. இவை ரபி பருவத்தில் விதைக்கப்பட்டு பிப்ரவரி-ஏப்ரல் மாதங்களில் அறுவடை செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டில் கொண்டைக்கடலை 2014-15-ம்ஆண்டு 6,800 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 4,400 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கடந்தாண்டை விட இந்தாண்டு கொண்டைக்கடலை உற்பத்தி 11 லட்சம் டன்கள் குறைந்துள்ளது. எனவே இப்பற்றாக்குறையை போக்க, மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் 2015-16 (ஏப்ரல்-நவம்பர்) ஆண்டில் 3.75 லட்சம் டன்கள் வரை கொண்டைக்கடலை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தான்சானியா, ரஷ்யா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்தியாவிற்கு கொண்டைக்கடலையை அதிகளவு இறக்குமதி செய்கின்றன. மேலும், சாதகமற்ற வானிலை காரணமாக உற்பத்தி குறையும் என்பதால் வரும் காலங்களில் கொண்டைக்கடலை விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழலில் விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 13 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய கொண்டைக்கடலை விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்புத் திட்டம் ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் அறுவடையின் போது, கொண்டைக்கடலையின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.75-80 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. விலை முன்னறிவிப்பின்படி, விவசாயிகள் கொண்டைக்கடலை சாகுபடியை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.


**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641003
தொலைபேசி – 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பயறு வகைத் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641003
தொலைபேசி – 0422-2450498